# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 154/2020**

**Deposition of Witness for Prosecution : P.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **ராமர்** | Caste | : | |
| Father/Husband Name | : | **நடராஜன்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 24.05.2025**

**முதல் விசாரணை**

நான் வலங்காகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். விபத்து நடந்தது சம்பந்தமாக கேட்டார்கள் கையெழுத்து போட்டேன். அந்த கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ. 3)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் ராமர் என்பவரும் கையெழுத்து செய்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 05.10.2017 அன்று 20.00 மணிக்கு செக்கானூரணி காவல் நிலைய ஆய்வாளர் குற்ற எண் 243/2017 என்ற வழக்கில் சம்பவ இடத்தை எனது மற்றும் ராஜா முன்னிலையில் பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2025.05.24 15:44:22 +0530

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 154/2020**

**Deposition of Witness for Prosecution : P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : **ராஜா** | | Caste | : |
| Father/Husband Name | : **பாண்டி** | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 24.05.2025**

**முதல் விசாரணை**

நான் வலங்காகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். சம்பவம் நடந்தது பற்றி வரைபடத்தில் காட்டியிருந்தார்கள் அதனால் நான் கையெழுத்து போட்டேன். அந்த கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ. 2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் ராமர் என்பவரும் கையெழுத்து செய்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 05.10.2017 அன்று 20.00 மணிக்கு செக்கானூரணி காவல் நிலைய ஆய்வாளர் குற்ற எண் 243/2017 என்ற வழக்கில் சம்பவ இடத்தை எனது மற்றும் ராமர் முன்னிலையில் பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2025.05.24 15:44:29 +0530

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 154/2020**

**Deposition of Witness for Prosecution : P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : **ஆனந்தபாண்டி** | Caste | : | |
| Father/Husband Name | : **ராஜேந்திரன்** | Calling | : | |
| Village | : | Religion | : | |
| Taluk | : | Age | : | |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 24.05.2025**

**முதல் விசாரணை**

நான் வலங்காகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஹோட்டல் வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 எனது தம்பி ஆவார். விபத்தில் இறந்துபோனர் எனது அப்பா ராஜேந்திரன் ஆவார். கடந்த 2017 ஆம் ஆண்டு காலை 08.15 மணியளவில் எனது அப்பா வலங்காகுளத்திலிருந்து செல்லம்பட்டிக்கு நடந்து வந்துகொண்டிருந்தபோது, செல்லம்பட்டி டீக்கடைக்கு அருகே உசிலம்பட்டியிலிருந்து மதுரைநோக்கி வந்த டிராவல்ஸ் வேன் எனது அப்பாவின் மீது மோதியது. அதில் எனது அப்பாவுக்கு நெஞ்சில் அடிப்பட்டு பலத்த காயம் ஏற்பட்டது. மேற்படி விபத்து குறித்து எனக்கு ராஜா என்பவர் தகவல் சொன்னார். நான் உடனே சம்பவ இடம் சென்று ஆம்புலன்சு மூலம் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். அங்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது

சம்பந்தமாக எனது தம்பி அ.சா.1 வாலாந்தூர் போலீசாரிடம் புகார் கொடுத்தார். மேற்படி வேனை மகேஸ்வரன் என்பவர் ஓட்டி வந்தவர். ஆஜர் எதிரிதான் அவர் ஆவார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நாங்கள் அனைவரும் அந்த சமயத்தில் கூட்டு குடும்பமாக இருந்தோம். நான் வலங்காகுளம் வீட்டில் இருக்கும்போது அ.சா.1 எனக்கு தகவல் சொன்னார். அதன்பின்புதான் நான் சம்பவ இடம் சென்றேன். எனக்கு யார் வண்டி ஓட்டி வந்தார்கள் என்றும், எப்படி விபத்து நடந்தது என்றும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது சகோதரன் சொல்லிதான் எதிரியின் பெயர் மற்றும் விபரங்கள் தெரியும் என்றால் சரிதான்.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2025.05.24 15:44:34 +0530

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 154/2020**

**Deposition of Witness for Prosecution : P.W.1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **கார்த்திக்கேயன்** | Caste | : |
| Father/Husband Name | : **ராஜேந்திரன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 24.05.2025**

**முதல் விசாரணை**

நான் வலங்காகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோனர் எனது அப்பா ராஜேந்திரன் ஆவார். கடந்த 2017 ஆம் ஆண்டில் காலை 08.15 மணியளவில் எனது அப்பா வலங்காகுளத்திலிருந்து செல்லம்பட்டிக்கு நடந்து வந்துகொண்டிருந்தபோது, செல்லம்பட்டி டீக்கடைக்கு அருகே உசிலம்பட்டியிலிருந்து மதுரைநோக்கி வந்த டிராவல்ஸ் வேன் எனது அப்பாவின் மீது மோதியது. அதில் எனது அப்பாவுக்கு நெஞ்சில் அடிப்பட்டு பலத்த காயம் ஏற்பட்டது. மேற்படி விபத்து குறித்து எனக்கு ராஜா என்பவர் தகவல் சொன்னார். நான் உடனே சம்பவ இடம் சென்று ஆம்புலன்சு மூலம் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். அங்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்பந்தமாக

நான் வாலாந்தூர் போலீசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் **(அ.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வேனை ஓட்டி வந்தவர் யார் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகாரை நான் கைப்பட எழுதி கொடுத்தேன். நான் புகார் கொடுக்கும்போது இரவு 07.00 மணி. வலங்காகுளத்திற்கும் செல்லம்பட்டிக்கும் 3 கி.மீ தூரம் இருக்கும். எனது மனநல பாதிக்கப்பட்ட சகோதரியை சிகிச்சைக்காக எனது அப்பா அன்றைய தினம் கூட்டி சென்றிருந்தார். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2025.05.24 15:44:40 +0530